வில்லை. இன்னும் துறைமுகங்கள் அதிகப்படுத்தப்பட்டு, இயந்திர சாதனங்கள் கிடைக்கப் பெற்றவுடன் நம்முடைய மாநில மக்களுக்குக்கூட இரால் மீன்கள் வழங்கப்படும்.

* 39. வினு—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மண்டபம் பகுதியில் கிடைக்கும் உணவுக்கான மீன்களை விற்பனை செய்ய மதுரை போன்ற நகரங்களில் விற்பனைக் கூடங்கள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. காளிமுத்து : இனியாவது அதைப் பரிசீலித்து அப்படி விற்பனைக் கூடங்களைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது மதுரை போன்ற இடங்களில் விற்பனைக்காக கூடங்கள் இருக்கவில்லை என்றாலும், நான் சற்று முன்னால் ஒரு கேள்விக்குப் பதில் கூறியதுபோல மண்டத்திலிருந்து குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்து மீன்களைக் கொண்டுவந்து மதுரை, திண்டுக்கல், விருதுநகர், பாளையங்கோட்டை, நெல்லை போன்ற பகுதிகளில் எல்லாம் மீன்கள் விற்கப்படுகின்றன. தனிப்பட்டவர்கள்கூட மண்டபத்திலிருந்து கொண்டுவந்து மதுரையில் மீன்களை விற்கிருர்கள். மதுரையில் அரசாங்கத்தின் சார்பிலே விற்பனைக் கூடம் இருக்கவில்லை.

திரு. கோவை செழியன் : மண்டபப் பகுதியிலே மீன்களோடு கடற் கன்னிகள் கிடைத்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இரண்டு கடற் கன்னிகள் மண்டபத்தில் இருப்பதாகச் சொல்கிருர்கள். அவைகள் இருக்கின் றனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்று பார்க்கலாம்.

மண்டபத்திலுள்ள மீன் பதனிடும் தொழிற்சாலை

* 40. வினு—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இந்திய-நார்வே மீன் பிடிக்கும் திட்டத்தின்கீழ் மண்டபத்தில் அமைந் துள்ள மீன் பதனிடும் தொழிற்சாலையைத் தனியார்க்கும் வாடகைக்கு விடும் உத்தேசம் உண்டா ?

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லே.

திரு. கா. காளிமுத்து: தற்பொழுது அதனே கோளாவைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. தமிழகத்தில் உள்ளவர்கள் பயன்படுத்தும் அளவுக்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கோளத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் எதுவும் குறிப்பில் இருக்கவில்லே. அதிலே ஃப்ரோஸன் அறைகள் என்றும், தட்டுகளின் மூலமாக மீன்களே உறையவைப்பது என்றும் ஆக இரண்டு முறைகள் இருக்கின்றன. அறைகளில் நீண்ட காலத்திற்கு மீன்களேச் சேமித்து வைக்கிருர்கள். தட்டுகளில் குறைந்த காலத்திற்கு வைத்து விற்கின்ருர்கள். பெட்டிகளில் வைத்துக்கொள்வதற்கு அப்படிப்பட்ட சிலர்களுக்கு அது வாடகைக்கு விடப்படுகிறது. முற்றிலும் கோளத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் விடப்படுகிறது என்ற விவரம் தற்பொழுது என்னிடம் இல்லே.

திருமதி த. ந. அனந்தநாயகி: நார்விஜியர்கள் நம்முடைய மாநிலத்தில் எங்கே என்ன வகையான மீன்கள் கிடைக்கும் என்று கண்டுபிடித்துச் சொல்வதற்குத்தான் வந்திருக்கிருர்களா? அல்லது அவர்களே நேரில் மீன்களேப் பிடித்து வியாபாரம் செய்யக்கூடிய அளவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவர்கள் நமது மாநிலத்தில் எங்கே மீன்கள் கிடைக்கின்றன, மீன்களே எப்படிப் பிடிப்பது, பிடித்து எப்படி உறைய வைப்பது, அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய எப்படிப் பதப்படுத்தி வைப்பது, மீன்களிலிருந்து பிஷ் மீல் எப்படித் தயாரிப்பது ஆகிய இப்படிப்பட்ட பல திட்டங்களுக்காகத்தான் அவர்கள் நமது நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கிருர்கள். அதன்மூலம் பிடிக்கப்படுகின்ற மீன்கள்தான் அயல் நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் அயல் நாடுகளுக்கு மீன்களே அனுப்பவில்லே.

Salem Steel Plant

* 41 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Dastur and Company, the Consultants for the Salem Steel Plant have submitted the detailed report; and

(*b*) if not, the reasons for the delay?